# உதவிக்காரர்களின் நியமனம்

ஆகவே, அது தான், அது முதலாவதாக சபைக்குள்ளாக சில உதவிக்காரர்களை வைப்பதாகும். இங்கேயுள்ள நம்முடைய சிறு சபையானது தனியுரிமை ஆட்சியுடையது. அது அதனுடைய உதவிக்காரர்களை அனுப்புவதற்கு எந்த ஸ்தாபனத்தையோ அல்லது வேறு எதையும் உடையதாய் இருக்கவில்லை, அதுவே அதனுடைய சொந்த உதவிக்காரர்களை தேர்ந்தெடுக்கிறது. அது தன்னுடைய மேய்ப்பரை தெரிந்தெடுத்துக் கொள்கிறது, அது தன்னுடைய தர்மகர்த்தாக்களை தெரிந்தெடுத்துக் கொள்கிறது, சபைக்குள்ளே அல்லது வெளியே வருகின்ற எல்லாவற்றையுமே அது தெரிந்தெடுக்கிறது. எந்த ஒரு நபருக்கும் எந்த காரியத்தின் மீதும் உரிமை கிடையாது, அது சபைக்குரியதாகும். சபைக்கு வந்து, தங்களுடைய வருகையினாலும் தங்களுடைய தசமபாகம் மற்றும் காணிக்கைகளினால் சபையைத் தாங்குபவர்கள் தான் சபையாகும், அப்படிப்பட்டவர்களே இப்படிப்பட்ட நியமித்தலில் சட்டப்படியான உரிமை பெற்றிருக்கிறார்கள்.

2 மேலும் முன்னாள் உதவிகாரர் குழுவிற்கு நான் நன்றி கூற விரும்புகிறேன், நான் இங்கிருந்து இந்த முழு சபையின் சார்பாகவும் இதைக் கூறுகிறேன். அந்த சகோதரர்களில் யாராவது இங்கிருப்பார்களாயின், சகோதரன் காக்ஸ், சகோதரன் ஃபிளீ மேன், சகோதரன், ஹிக்கின்பாதம் மற்றும் சகோதரன்- டீட்ஸ் மேன், அவர்கள் நமக்கு, கர்த்தருக்கு, இந்த கூடாரத்தில் நல்ல ஒரு சேவையை செய்தனர்.

3 ஆகவே ஒவ்வொரு தடவையும், சபையின் உபசட்டத்தின்படியும், ஒவ்வொரு வருடமும், உதவிக்காரர்களை அல்லது தர்மகர்த்தாக்களை தானாகவே தங்களுடைய காலத்திற்கேற்றவாறு அமர்த்திக்கொள்வார்கள். அவர்கள் திரும்பவுமாக வர விரும்பினால், சரி. திரும்பவுமாக இருக்க அவர்களுக்கு விருப்பமில்லையென்றால், அப்பொழுது இந்தக் குழு ராஜினாமா செய்ததென்றால், அப்பொழுது அவர்களுடைய இடங்களில் மற்ற ஒருவரை அமர்த்தலாம்.

4 அன்றொரு இரவு நான் தர்மகர்த்தாக்களின் குழுவை அழைத்தேன், அது ஒரு புதிய தர்மகர்த்தாக்கள் குழுவாய் உள்ளது. நான் சகோதரன் லூத்தர் மெக்டோலை இங்கே இன்றிரவில் பார்த்தேன், அவர் முன்னிருந்த தர்மகர்த்தாக்களின் குழுவில் இருந்தார், அவரை மீண்டும் குழுவில் காண்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த வாரத்தில் நான் ஒரு ஆவண பிரதி நகல் எடுக்கப்பட்டுவிட்டதா என்று கண்டறியச் சென்றேன், அது சபைக்கும் கூட, அளிக்கப்படும். இப்பொழுது சபையின் தர்மகர்த்தாக்கள்

சகோதரன் வில்லியம் மார்கன், சகோதரன் மைக் ஈகன், சகோதரன் பாங்க்ஸ் உட், மற்றும் சகோதரன் ராய் ராபர்சன் ஆவர். இந்த இரண்டு நகரங்கள் நடுவில் வசிக்கின்ற சகோதரன் ராய் ராபர்சனைத் தவிர, ஏனையோரெல்லாம் இந்த நகரத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். கர்த்தர் இந்த மனிதரரைப் பொருத்தமானவர்களாகக் கண்டுள்ளார், மேலும் அவர்கள் கனம்மிக்க மதிப்பிற்குரிய மனிதராக இருந்து வருகின்றனர்.

5 இப்பொழுது இந்த சபையின் தர்மகர்த்தாக்களின் பணியை அவர்கள் பெற்றுள்ளனர், ஆகவே இந்த கூட்டமானது நடைபெற்றுக்கொண்டிருக்கையில், ஒரு புதிய உதவிக்கார குழுவினை தேர்ந்தெடுக்கும்படி, அதாவது இவர்களுடைய பணிக்காலம் முடிவுற்று இராஜினாமா செய்துவிட்டனர் என்றும், ஆகையால் சில புதிய உதவிக்காரரர் குழுவை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று எங்களுக்கு உதவி மேய்ப்பரால் கூறப்பட்டது. இப்பொழுது, சபை…அந்த விதமாகத்தான் இது செய்யப்பட்டிருக்கின்றது, குழுவே உதவிக்காரர்களை நியமிக்க முடியும், கனத்துக்குரிய மற்றும் நேர்மையான மனிதனாய் கண்டறியப்படும்படி அவர்களோடு தொடர்புகொண்டுள்ள மனிதனையே.

6 ஒரு உதவிக்காரனுடைய அலுவலானது மிகவும் மகத்தான ஒரு அலுவலாகும், மேலும் சபையில் ஒரு உதவிக்காரனாக இருப்பது தேவனுக்கு ஒரு மகத்தான கனமாக இருக்கிறது. ஆகவே, கடந்த இரவு கூட்டத்தில், ஒரு குறிப்பிட்ட மனிதர் என்னிடம் கொண்டு வரப்பட்டார். மேய்ப்பருடனான கூட்டத்தில், கடந்த…இந்த வெள்ளிக்கிழமை, இவர்கள் மதிப்புமிக்கவர்களும் நேர்மையுள்ள மனிதர் என்றும் இந்த மனிதனால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

7 அவர்கள் கண்டெடுத்த ஒரு வாலிப மனிதன், முற்றிலுமாக தகுதியில்லாதவராக இருந்தார் (அவர் சரியான மனிதன் அல்ல என்பதனால் அல்ல), நம்முடைய தர்மகர்த்தாக்களின் குழுவைச் சார்ந்த கனம்மிக்க ஒரு மனிதனால் இவர் குறிப்பிடப்பட்டிருந்தார். ஆனால் நானும் மேய்ப்பரும் ஒன்று சேர்ந்து வந்தபோது, நான் இந்த வாலிப மனிதனின் வயதைக் கேட்டேன், அவன் தன்னுடைய இருபதாவது வயதின் துவக்கத்தில் இருந்தான். கனம்மிக்க, நேர்மையான, மற்றும் உண்மையுள்ள மனிதனாக இருந்தான், ஆனால் அவன் திருமணமாகாத ஒருவனாக இருந்தான். ஒரு உதவிக்காரன் விவாகமான மனிதனாக இருக்க வேண்டுமென்று வேதாகமம் கட்டளையிடுகின்றது. அவன் ஒரே மனைவியையுடைய புருஷனாய் இருக்க வேண்டும்.

8 அதன்பின்னர் மற்றொரு மனிதன் மிகவும் கனத்திற்குரிய ஒரு மனிதனாய் இருந்தார், ஒரு சகோதரன் அவரைப் பரிந்துரைத்தப்படி, அந்தப் பணிக்கான தகுதி படைத்தவராகவும், மிகவும் உத்தமமுள்ள மனிதனாக இருந்திருப்பார். காரியத்தை விசாரித்த பிறகு, அந்த

சகோதரன் இந்த விசுவாசத்திற்குள் மிக சமீபத்தில் வந்தவராக இருந்தார், அவருடைய மனைவி இதை விசுவாசிப்பதில்லை என்றும் கண்டறியப்பட்டது. அப்படியானால் ஊழியத்தில் அந்த மனிதனை அது தகுதியற்றவராக்கிவிட்டது. ஏனெனில் அவர் தன்னுடைய முழு குடும்பத்தையும் கீழ்ப்படியப்பண்ணுகிறவராக இருக்க வேண்டும், அவர்களும் கூட விசுவாசத்தில் இருக்க வேண்டும், ஏனென்றால் அது ஒரு போராட்டமாக இருக்கும்.

9 நாம் இப்பொழுது கட்டிக் கொண்டிருக்கிறோம், மேலும் இந்த சபையை சரியாக பொருத்த விரும்புகிறோம். சபையின் பொது கண்காணி என்கின்ற முறையில், நான் இது வேதப் பூர்வமாக, ஒவ்வொன்றும் சரியாக வார்த்தையின் மேல் வைக்கப்பட்டிருக்கிறதா என்று, பார்க்க வேண்டியவனாக இருக்கிறேன்.

10 ஆகையால், அதன்பின்னர், அது குழு மற்றும் மேய்ப்பர் மற்றும் கண்காணியோடு சாதகமாக இருப்பது கண்டறியப்பட்டிருந்தால், இங்குள்ள இந்த ஜனக் குழுவில் நாம் கனத்திற்குரிய மற்றும் நேர்மையான மனிதர் என்று நினைக்கும் சிலரை இங்கே தேர்ந்தெடுக்க வேண்டும். எங்களால் அவர்களை மட்டுமே கொண்டுவர முடியும். இது, அதன்பின்னர், அவர்கள் சபையால் அவர்களுடைய சொந்த வாக்குகளால் நியமிக்கப்படுகின்றனர். ஆகவே அவர்கள் இந்த ஊழியத்தை ஏற்றுக் கொள்ள மனதுடையவர்களாயிருப்பதை உணர்ந்தால், அவர்கள் சேவை செய்யலாம். ஒருக்கால் தேவன் அவர்களை அழைத்திருக்கிறார் என்று உணர்கிறார்களா என்று பார்க்கத்தக்கதாக, சிறிது காலத்திற்கு இவர்கள் வருவார்கள். பிற்பாடு, தாங்கள் தகுதியிழந்தவர்கள் என்று அவர்கள் உணர்ந்தால், அப்பொழுது, அடுத்த சில வாரங்களில் தங்களுடைய பதவியை ராஜினாமா செய்ய இவர்களுக்கு உரிமையுண்டு, பிறகு அவர்களுடைய இடங்களில் வேறு ஒருவர் நியமிக்கப்பட ஏதுவாக இருக்கும்.

11 ஆனபோதிலும், எழுப்புதலின் ஆரம்பத்தில், அதாவது (தேவனுக்கு சித்தமானால்) நான் சற்று ஓய்வெடுத்தவுடன், இந்தக் கூடாரத்தில் இங்கேயே தொடர்ந்து நடத்த நான் விரும்புகிறேன், அப்பொழுது நான்—அப்பொழுது நான்…நாம் இந்த சபையில் இந்த உதவிக்காரர் மேல் கரங்களை வைப்பதன் மூலம், இந்த சபையில் உதவிக்காரரையும் பொருளாளரையும் நியமிப்போம். ஆனால் முதலில் அவர்கள் நியமிக்கப்பட வேண்டும் மேலும்—மேலும் இவர்கள் எப்படி இதை விரும்புகினறனர் என்றும் மற்றும் சபையோர் எப்படி இதை விரும்புகின்றனர் என்றும் பார்க்க வேண்டும். பிறகு அது—பிறகு அது இரண்டு பக்கங்களிலிருந்தும் சரியானது என்பதாக காணப்படுமானால், அப்பொழுது இந்த மனிதரை உதவிக்காரராக நியமிக்கிறோம், தர்மாகர்த்தாக்களும் இதே விதமாகத்தான் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

12 இது தேவனுடைய வார்த்தையின் மூலமான, சபையினுடைய சட்டமும் மற்றும் தனியுரிமையும் ஆகும். ஆதலால், அதாவது, “இந்த மனிதன் சரியான ஒரு மனிதனாக இருப்பான் என்று நான் நினைக்கிறேன்” என்று அவர்களால் கூற முடியாது, அதுவல்ல இது, “இந்த மனிதன் சரியான ஒரு மனிதனாக இருப்பார் என சகோதரன் நெவில் எண்ணுகிறார்,” அல்லது “இந்த மனிதன் சரியான ஒரு மனிதனாக இருப்பான் என்று தர்மகர்த்தாக்களின் குழு நினைக்கிறது.” அது சபையால் மாத்திரமே இருக்க வேண்டும்! யாரும் இங்கே தன்னுடையதை மாத்திரம் செய்வதில்லை. அது சபையின் வாக்கு ஆகும். அது தனியுரிமையுடைய சபையாகும்.

13 பழைய உபசட்டங்களின் பிரதிகள் 1937 ஆம் ஆண்டு வெள்ளப்பெருக்கில் அழிந்து போய்விட்டன. அவைகளை நாங்கள் மறுபடியுமாக எழுதியுள்ளோம், தர்மகர்த்தாக்கள், உதவிக்காரர், பொருளாளர், இன்னும் மற்றவர், மேய்ப்பர், இணைந்து பணியாற்றுவோர், போன்றோரின் பணிகளைப் பற்றி இங்கே விரைவில் அது சுவற்றில் தொங்கவிடப்படும்.

14 தேவனுடைய கிருபையால், இந்த சபையின் குழுமத்தினூடாக நூறு சதவீத வாக்குகள் மூலம், சகோதரன் ஹாலின் ஹிக்கர்சன், நீதியுள்ள, கனம்பொருந்திய மனிதனாகவும், இந்த கூடாரத்தின் உதவிக்காரர் என்கின்ற மகத்தான கனத்தை—பொறுப்பை பெற்றுக்கொள்ளக் கூடியவராக இருக்கிறார் என்று அவர்கள் கண்டுள்ளனர் என்று என்னிடம் கூறப்பட்டுள்ளது.

15 மேலும், குழுமத்தின் வாக்களிப்பின் மூலமாக, சகோதரன் காலின்ஸ் ஒரு கனம் மிக்க, நீதியுள்ள மனிதரென்று கண்டெடுக்கப்பட்டுள்ளது என நாங்கள் அறிந்துகொண்டோம். ஒரு ஊழியக்காரனாக அவர்தாமே இருப்பதால், சபையின் ஒரு—ஒரு உதவிக்காரராக இருக்கும்படியாக நாங்கள் அவரை அழைக்கிறோம், உதவிக்காரராக மாத்திரமேயல்ல, ஆனால் சகோதரன் நெவிலுக்கு உதவியாளராக, மேலும் ஒரு ஞாயிறு பள்ளி வகுப்புக்கு, அல்லது சகோதரன் நெவிலுக்கு பதிலாக இருப்பதற்காக, அல்லது சகோதரன் நெவிலுக்கு எந்தவிதத்திலெல்லாம் உதவியாளராக இருக்கமுடியுமோ அந்த விதத்தில் அவருக்கு உதவியாய் இருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறார். அது சகோதரன் காலின்ஸ் ஆகும்.

16 மேலும், சகோதரன் டோனி சேபில், ஒரு கனம் மிக்க, நீதியுள்ள மனிதனென்ற, அனுகூலத்தை, சபையானது கண்டெடுத்துள்ளது, மேலும் இந்தக் கூடாரத்தின் உதவிக்காரர் பதவியைப் பெற்றுக்கொள்ள அவரைக் கேட்டுக்கொள்ளும்படியாக, தர்மகர்த்தாக்கள் குழு மற்றும் மேய்ப்பர்கள் ஆகியோருக்கு முன்பாக அனுகூலத்தைப் பெற்றிருந்தார்.

17 மேலும் இதுவும் கூட கேட்டுக்கொள்ளப்பட்டு, நம் மத்தியில் ஒரு கனம்மிக்க நபர் கண்டெடுக்கப்பட்டுள்ளார்…(இல்லை…

இவர்கள் தான் கனம்மிக்க நபர் என்றல்ல, இப்பொழுது, ஆனால் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மாத்திரமே.) ஹென்றிவில், அல்லது மெம்ஃபிஸைச் சார்ந்த சகோதரன் டெய்லர், அது இண்டியானா விலுள்ள, மெம்ஃபிஸ் என்று, நான் நினைக்கிறேன். அவர் சில காலமாக நம்முடனே இருந்து வருகின்றார், வாயில்காப்போனாக மற்றும் என்ன வெல்லாமாக இருக்க முடியுமோ அவ்விதமாக செயல்படுகிறார். இவர் இந்த கூடாரத்தின் உதவிக்காரராக இருக்கின்ற அந்த—அந்த மகத்தான பதவியை ஏற்றுக் கொள்ளத்தக்கதாக சபை, அல்லது குழுமம் மற்றும் மேய்ப்பரின் அனுகூலத்தைப் பெற்றுள்ளார்.

18 மேலும் சகோதரன் மைக் ஈகனுடைய மருமகனான சகோதரன்—சகோதரன் பாப் ஹார்னார்ட்டனும் கூட கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார், கனம்மிக்க பொறுப்பாயிருக்கிற, கனமும் நியாயமும் தேவைப்படுகின்ற இந்த சபையின் பொருளாளர் பதவியை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக குழுமத்தாலும் மற்றும் மேய்ப்பராலும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்.

19 இதைச் செய்வதில், என் சகோதரரே, இங்கிருந்து உங்களை அழைப்பது, உங்களுக்கு அது ஒரு மகத்தான கனமாக இருக்கும் என்று, நான் நினைக்கிறேன். அது மாத்திரமல்ல, ஆனால் ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டும்.

20 நம்முடைய உடனுழைப்பாளரான சகோதரன் நெவிலை, இந்த நேரத்தில் உதவிக்காரரின் தேவைகளைப் படிக்கச் செய்வேன். சகோதரன் நெவில், நீங்கள் அதை தேவனுடைய வார்த்தையிலிருந்து வாசித்தால் நலமாயிருக்கும். [சகோதரன் நெவில் முதலாம் தீமோத்தேயு 3:8-13-ஐ வாசிக்கின்றார்—ஆசி.]

[*அந்தபடியே, உதவிக்காரரும் இரு நாக்குள்ளவர்களாயும், மதுபானப்பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல், நல்லொழுக்கமுள்ளவர்களாயும்,*]

[*விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக் கொள்ளுகிறவர்களாயும் இருக்க வேண்டும்.*]

[*மேலும், இவர்கள் முன்னதாகச் சோதிக்கபடவேண்டும்; குற்றஞ் சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ்செய்யலாம்.*]

[*அந்தப்படியே ஸ்திரீகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்க வேண்டும்.*]

[*மேலும் உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்த*

*குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்கவேண்டும்.*]

[*இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்.*]

21 ஆமென். இந்த நேரத்தில், அழைக்கப்பட்டிருக்கின்ற சகோதரர், அவர்கள் இங்கே சற்று நேரம் மேலே மேடையை நோக்கி வரும்படியாய் நான் கேட்டுக்கொள்கிறேன். நாம் ஜெபத்திற்காக நம்முடைய தலைகளை சற்று தாழ்த்துகையில், நான் அவர்களை... விரும்புகிறேன். இது என்னவென்பதை சபை அறியும், அது தாமே உங்களுடைய உதவிக்காரர் குழுவையும் மற்றும் உங்கள் பொருளாளரையும் தேர்ந்தெடுப்பதாகும்.

22 கர்த்தராகிய இயேசுவே, தெளிந்தவர்களாய், தேவசிந்தனையுடையவர்களாக இப்பொழுது உம்மிடம் நாங்கள் வருகிறோம். உம்முடைய மகா பரிசுத்த வார்த்தையின் மரியாதையில் நாங்கள் வருகிறோம், "ஒவ்வொரு மனிதனுடைய வார்த்தையும் தவறாயிருப்பதாக, ஆனால் தேவனுடைய வார்த்தை சத்தியம்" என்று விசுவாசித்துக் கொண்டு நாங்கள் வருகிறோம். இயேசு தம்முடைய சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே சம்பாதித்த இந்த சபைக்காவும், நாங்கள் ஆராதிக்க இந்த கட்டிடத்தை எங்களுக்கு அளித்ததற்காகவும் உமக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

23 இந்த மகத்தான மந்தையின் கண்காணிகளாக, அப்படி இருக்கத்தக்கதாக பரிசுத்த ஆவியானவர் எங்களை நியமித்திருக்கிற வேளையில், ஆவியில் நிரப்பப்பட்டு மற்றும் ஊழியத்திற்கு தயாராயிருக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிற உத்தமமான, நீதியுள்ள மனிதரை, இந்த சபையாருக்கு இப்பொழுது அளிக்க நாங்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். ஒருமுறை உதவிக்காரரைக் குறித்து, "நீங்கள் சென்று விதவைகளையும் அனாதைகளையும் விசாரிக்கவும், பணத்தை வழங்கவும், சபையின் நற்காரியங்களைக் கவனிக்கவும், இவ்விதமான வேலைக்காக, பரிசுத்த ஆவியும் நற்சாட்சிப் பெற்றிருக்கிற மனிதனை நீங்களே தெரிந்துகொள்ளுங்கள்," என்று கூறப்பட்டிருக்கின்றது. வருடங்கள் கடந்தபின், மகத்தான பரிசுத்த பவுல், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, அத்தகைய ஸ்தானங்களின் தேவைகளைப் பற்றி நாங்கள் சற்று முன் வாசித்ததை பிரகடனம் செய்தான்.

24 தேவனே, இந்த மனிதரை கௌரவித்தருளும். இப்பொழுது, கர்த்தாவே, ஒரு தனியுரிமை கொண்ட சபையாய், கர்த்தராகிய இயேசுவின் சரீரமாக, அவர்கள் தேர்ந்தெடுத்தலைச் செய்வார்கள், இப்பொழுது இது தேர்வுரிமையாகும். மேலும்...[ஒலி நாடாவில் காலியிடம்—ஆசி]...அந்த நீதியுள்ள பரிசுத்த நாமமாகிய

இயேசுவில், ஆராதனையின் இந்த பாகத்தை ஒரு விசேஷித்த விதத்தில் நடத்தும்.

25 இப்பொழுது நம்முடைய தலைகள் வணங்கியிருப்பதோடு, நம்முடைய தலைகள் மாத்திரமல்ல நம்முடைய இருதயங்களும் கூட, இந்த சபையின் அங்கத்தினர் என்கிற முறையில் ஒவ்வொருவரும், அதாவது இங்கே தவறாமல் வந்து, உங்களுடைய தசமபாகம் மற்றும் காணிக்கைகளாலும் இதை தாங்குகின்றவர்கள், இந்த சபையின் ஒரு அங்கத்தினராக கருதப்படுகிறவர்கள், மேய்ப்பரும் நானும், மாத்திரம், பார்க்கும்போது, உதவி மேய்ப்பர், சகோதரன் நெவிலும், நானும் நோக்கிப் பார்க்கும்போது, உங்களுடைய சிறந்த சிந்தனையின்படி, இந்த மக்கள் கூட்டத்திற்கு உதவிக்காரராக இருக்கும்படி, சகோதரன் டெய்லர் நியாயமான மற்றும் தகுதியுள்ள மனிதனென்றும், உதவிக்காரராக இருக்கலாம் என இந்த சபையானது காண்கிறதா என்று நான் கேட்கிறேன்? உங்களுடைய கரத்தை உயர்த்துவதன் மூலம் அதையே நீங்கள் தெரிவிப்பீர்கள். [சகோதரன் பிரான்ஹாம் பேசுவதை நிறுத்துகிறார்—ஆசி.] சரி. இப்பொழுது ஏதாவது முரண்பாடாக இருக்கிறதென்றால், உங்கள் கரத்தை உயர்த்துவீர்களா. [சகோதரன் பிரான்ஹாம் பேசுவதை நிறுத்துகிறார்.] உங்களுக்கு நன்றி.

26 இந்த சபையின் அங்கத்தினர்கள் எவராவது இங்கே…எல்லாரும், சகோதரன் ஹாலின் ஹிக்கர்சன் நியாயமுள்ள, கனம்மிக்க மனிதனாக நீங்கள் கண்டறிகிறீர்களா, மற்றும் கூறப்பட்டுள்ளபடி இந்த சபையின் உதவிக்காரராக ஆவதற்கு உங்களுடைய பார்வையில் பாத்திரவானாக இந்த மனிதன் காணப்படுகின்றாரா? உங்களுடைய வலது கரத்தை உயர்த்துவதன் மூலம் நீங்கள் தெரிவிப்பீர்களா. [சகோதரன் பிரான்ஹாம் பேசுவதை நிறுத்துகிறார்—ஆசி.] அது முரண்பாடாக இருந்தால், அப்பொழுது உங்களுடைய கரத்தை உயர்த்துங்கள். [சகோதரன் பிரான்ஹாம் பேசுவதை நிறுத்துகிறார்.]

27 சகோதரன் காலின்ஸ், அதே விதமாக, ஒரு நீதியுள்ள மற்றும் கனமிக்க மனிதனென்றும், இந்த சபையின் உதவிக்காரப் பணிக்கு பாத்திரமானவர் என்றும் இந்த சபை கண்டறிகிறதா? உங்களுடைய கரத்தை உயர்த்துவீர்களா. [சகோதரன் பிரான்ஹாம் பேசுவதை நிறுத்துகிறார்—ஆசி.] சரி. அதற்கு முரண்பாடாக இருந்தால், உங்கள் கரத்தை உயர்த்துவீர்களா. [சகோதரன் பிரான்ஹாம் பேசுவதை நிறுத்துகிறார்.]

28 சகோதரன் டோனி சேபில் ஒரு கனம்மிக்க மனிதனாக மற்றும் இந்த சபையிலுள்ள இந்த மந்தைக்கு ஒரு உதவிக்காரராக இருக்கின்ற, இந்த உத்தியோகத்திற்கு பாத்திரவானாக இந்த சபை கண்டறிகிறதா? உங்களுடைய வலது கரத்தை உயர்த்துவீர்களா. [சகோதரன் பிரான்ஹாம் பேசுவதை நிறுத்துகிறார்—ஆசி.] அதற்கு மாறாக இருக்குமாயின், உங்கள் கரத்தை உயர்த்துவீர்களா. [சகோதரன் பிரான்ஹாம் பேசுவதை நிறுத்துகிறார்.]

29 சிலகாலமாக நம்முடன் இருக்கின்ற, இந்த சபையின் நிதியை கையாளுவதற்கும் மற்றும் இதனுடைய ரசீதுகளுக்கு பணம் செலுத்தத்தக்கதாக, செயலாளர்-பொருளாராக இருக்கும்படியாக, ஒரு நியாயமான மற்றும் நீதியுள்ள மனிதனாக சகோதரன் ஹார்னார்ட் இருக்கின்றார் என்று சபையார் உணர்கிறீர்களா? அப்படியானால், உங்களுடைய வலது கரத்தை உயர்த்துங்கள். [சகோதரன் பிரான்ஹாம் பேசுவதை நிறுத்துகிறார்—ஆசி.] ஏதேனும் எதிர்மாறாக இருக்குமானால், உங்களுடைய வலது கரத்தை உயர்த்துங்கள். [சகோதரன் பிரான்ஹாம் பேசுவதை நிறுத்துகிறார்.]

30 இங்கே இந்நேரத்தில், சிலுவையின் அடியில், நின்றுகொண்டிருக்கிற இந்த—இந்த சகோதரரிடத்தில் நான் கூற விரும்புவது என்னவென்றால், (முரண்பாடான கருத்து எதுவுமே இல்லாமல்) தேவன் உங்களை அழைத்திருக்கிறார் என்றும், இந்த பணிக்கு தேவனுடைய பார்வையில் நீங்களெல்லாரும் பாத்திரவானாக காணப்படுகிறீர்கள் என்றும் இந்த சபையானது காண்கிறது.

31 இப்பொழுது, நீங்கள், கூறினதுபோல, “இவர்கள் இந்த உத்தியோகத்தை வாஞ்சிக்கிறார்களா என்று பார்க்க, முதலாவது சோதிக்கப்படுவார்களாக.” இன்னும் ஒரு சில வாரங்களுக்குள், தேவனுக்குச் சித்தமானால், இந்த குழுவினர் மீது என்னுடைய கரங்களை வைத்து, அதிகாரப்பூர்வமாக தர்மகத்தா…இல்லை இந்த சபையின் உதவிக்காரராக, பொருளாளராக அவர்களை ஆக்க நான் திரும்பி வருவேன்.

நாம் நம்முடைய தலைகளை சற்று தாழ்த்துவோமாக:

32 கர்த்தாவே, உலகத்திற்கு முன்பாக தேவபக்தியுள்ளவராக நடக்கத்தக்கதாக இன்னுமாக பூமியின் மீது மனிதன் ஜீவித்துக்கொண்டிருக்கிறான் என்பதற்காகவும்; இந்த விதமாக மிகவும் கண்டிப்பான விதிகளையுடைய, மிகவும் தேவபக்தியான ஒரு கூடாரம், ஒரு வாக்கும் முரண்பாடின்றி, தங்களுடைய வழிகாட்டிகளாக ஐந்து பேருக்கு வாக்களித்து அந்த ஸ்தானத்திற்குள்ளாக வைத்துள்ளதற்கு இன்றிரவு நாங்கள் மகிழ்ச்சியாய் இருக்கிறோம். அவர்களுக்காக நாங்கள் மகிழ்ச்சி கொள்கிறோம், மேலும் மேய்ப்பர்களாகிய எங்களோடும், குழுமத்தோடும் இந்த தீர்மானங்களை நாங்கள் எடுக்கையில் நீர் எங்களோடு இருந்தீர் என்பதை நாங்கள் உணர்கிறோம்.

33 தேவனே, இந்த மனிதரை ஆசிர்வதிப்பாராக. இந்த உத்தியோகமானது பரலோகத்தில் அவர்களுக்கு ஒரு மகத்தான நிலையை சம்பாதித்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்து, அவர்களுடைய முழு இருதயத்தோடு இந்த பணியை அவர்கள் செய்வார்களாக. என்றாவது ஒரு நாளிலே பரலோகத்தின் புஸ்தகங்கள் மூடப்படுகையில், பரலோக ஜீவிகளின் புத்தகமும்

மற்றும் பரலோகத்தின் மகத்தான புத்தகமும் திறக்கப்படுகையில், இவர்களுடைய பெயர்கள் தாமே இரட்சகருக்கும் தேவனுக்கு முன்பாகவும், மற்றும் பரலோகத்தின் எல்லா சேனைகளுக்கும் முன்பாகவும், நூறு சதவீதம் இதே விதமாக அவருடைய ராஜ்யத்தில் இருப்பதாக. அவர்களை ஆசீர்வதியும், கர்த்தாவே, இந்த பணியில் இவர்கள் தாமே சிறந்த விதத்தில் சேவை செய்வார்களாக. இவர்களுக்காக இயேசுவின் நாமத்தில் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். ஆமென்.

34 நான் உங்கள் கரங்களை குலுக்க விரும்புகிறேன், சகோதரன் ஹார்னார்ட், மற்றும் சகோதரன் சேபில், மற்றும் சகோதரன் காலின்ஸ், சகோதரன் ஹிக்கர்சன், மற்றும் சகோதரன் டெய்லர். இந்த விதமான மிகவும் கனம்மிக்க மனிதருடன் இவ்வளவு காலமாக நாங்கள் ஐக்கியப்பட்டிருக்கிறோம் என்பதை அறிய மிக்க மகிழ்ச்சி கொள்கிறோம். இப்பொழுது தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நாங்கள் சரியான நேரத்தில் உங்களை சந்திப்போம், நான் சிறிது ஓய்வு பெற்று, மறுபடியுமாக திரும்பியவுடனே, உங்களுடைய உத்தியோகத்தை எப்படி நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதைக் காண்போம். சரி, இவர்களுடைய வாக்குகளின் மூலம், முரண்பாடான ஒன்றில்லாமல், நூறு சதவீதமாயிருந்தது என்று நான் நினைக்கிறேன்.

35 ஒ, தேவனுக்கு முன்பாகவும், மற்றும் இப்பொழுதுள்ள, இந்த விதமான சூழ்நிலையில் இருக்கின்ற இந்த உலகத்திற்கு முன்பாகவும் தேவபக்தியுள்ளவர்களாக இன்றைக்கு ஜீவிக்க முடிகின்ற மக்களுடன் நீங்கள் ஐக்கியப்பட்டிருக்கிறீர்கள் என்பதில் நீங்கள் மகிழ்ச்சி கொள்ளவில்லையா? அது ஒரு அற்புதமான காரியமாகும்.

36 இந்த மனிதர் மற்றும் இந்த சபையை என்னுடைய நண்பர்களாக கொண்டிருக்கும் சிலாக்கியத்தை உடையவனாக இருக்கிறேன் என்பதை அறிந்துகொள்வதில் இன்றிரவு நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உலகம் முழுவதும் உள்ள தம்முடைய சபையில் தேவன் என்னை ஐக்கியங்கொள்ளச் செய்ததற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஓ, அவர்கள் வெறுக்கப்பட்டு மற்றும் புறக்கணிக்கப்பட்டு மற்றும் புறங்கூறுகிறார்கள், இன்று காலை என்னுடைய செய்தியில் நான் கூறினவிதமாக, ஒருக்கால் மண் பூசுபவர்களாக, ஒரு “தீவிர மதவெறி பிடித்த கூட்டமாக” உலகம் அவ்வாறு அவர்களை பார்க்கின்றது, ஆனால் தேவனோ அவர்களை தம்முடைய பிள்ளைகளாக பார்க்கின்றார். அதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். சந்திரனுக்கு எத்தனை மைல் தூரம் என்று அவர்களால் உங்களுக்குச் சொல்ல முடியாமல் இருக்கலாம். இந்த முழு சூரிய குடும்பமும் மற்றும் அது எப்படி செயல்படுகிறது என்பதையும் அவர்கள் உங்களுக்கு சொல்ல முடியாமல் இருக்கலாம். ஆனால் அவர்கள் அறிந்திருக்கிற ஒரு காரியம்

உண்டு, தாங்கள் மறுபடியும் பிறந்த மணி நேரத்தை அவர்கள் அறிந்துள்ளனர். அவர்களுக்காக நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

37 நான் கற்றுக் கொண்ட ஒரு சிறு உவமையைப் போன்றே, அது இன்றிரவு நமக்கு மிகவும் தத்ரூபமாக ஆகத்தக்கதாக, அதன் பொருளை நீங்கள் புரிந்துகொள்ளத்தக்கதாக, இதை என்னுடைய சிறிய பெண் பிள்ளைகளிடையே எங்களுடைய வீட்டில் ஒரு விதமாக ஏற்பட்ட சம்பவத்தை நான் தொடர்பு படுத்தப்போகிறேன். ஒரு காலை பொழுதில், படுக்கையை விட்டு எழுந்திருக்கையில்... எனக்கு இரண்டு சிறு மகள்கள் உண்டு. அவர்களில் ஒருத்தி ரெபெக்காள், அவர்களில் இன்னொருவள் சாராள், அவர்கள் இருவரும் அப்பாவின் சிறு பெண் பிள்ளைகள்.

38 எனக்கு ஜோசப் என்கின்ற, சிறு பையன் இருக்கிறான். நான் இந்த கடைசி தொடர் கூட்டத்தில் இருந்த போது, ஓர் இரவு ஒரு கூட்டத்தில் இருந்து, சட்டனூகாவில் இருந்து வந்துகொண்டிருந்தேன். என்னுடைய மூத்த மகன் பில்லியுடன் நான் காரில் சென்று கொண்டிருந்தேன். அவனுடைய மனைவியும், மேடாவும், மகள்களும் காரில் இருந்தனர். நாங்கள் காரோட்டி வந்துகொண்டிருக்கையில், நகரத்தின் பல இடங்களை கடந்து வந்தும் யாருமே எதுவும் பேசவில்லை. அந்த இரவு அந்த மக்கள் செய்து கொண்டிருந்ததைக் குறித்து நான் மிகவும் கடிந்துக்கொண்டு பேசினேன். மேலும் யாருமே எதுவுமே கூறாமல் இருந்தனர். குட்டி ஜோசப் தாண்டி என்னிடம் வந்து என் தோளைப் பற்றிக்கொண்டு, அவன், "அப்பா, இன்றிரவு நீர் கடினமாக பிரசங்கித்தீர்!" என்றான்.

39 ஆகவே இக்காலை நான் புறப்பட்டு எய்த் மற்றும் டென்த் தெருவிற்கு அந்த...இல்லை பென் மற்றும் டென்த் தெருவிற்கு நான் செல்கையில், மனைவியும் இரண்டு பெண்பிள்ளைகளும், யாருமே ஒரு காரியத்தையும் பேசவில்லை. குட்டி ஜோசப் மறுபடியுமாக என் தோளைப் பற்றிக் கொண்டு, அவன், அதாவது, "அப்பா, இக்காலை அந்த பிரசங்கம் நிச்சயமாகவே எனக்கு மிகவும் பிடித்தது" என்றான்.

நான், "பாருங்கள், நான் ஒரு ரசிகனைப் பெற்றுக் கொண்டேன், அது என்னுடைய மகன்" என்றேன்.

40 இப்பொழுது நம்முடைய சிறு உவமைக்குச் செல்வோம். ஒரு நாள் காலை, அறையில் உட்கார்ந்திருந்தபோது, குட்டி பெக்கி ஓடி வந்து, என் காலின் மேல் அமர்ந்து அவள் என்னை சுற்றி கரத்தைப் போட்டாள். அவள் அப்பாவின் சிறு பெண் பிள்ளை. அவள் என்னை அணைத்துக் கொண்டிருந்தாள். பிறகு சிறு சாராளும் கட்டிலிலிருந்து குதித்து தன்னுடைய சிறு பைஜாமா உடையுடன், அடுத்ததாக ஓடி வந்தாள். அவள் சிறு பழுப்பு நிறக் கண்களையுடையவள் ஆவாள்.

41 குட்டி பெக்கியோ, "ஓ, சாராளே, நீ வர வேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில் முழு அப்பாவும் என்னிடம் இருக்கிறார். அப்பா முழுவதும் எனக்குத்தான்!" என்று கூறினாள். குட்டி

சாராளோ, அவளுடைய சிறு உதடுகள் கீழே தொங்கிக்கொண்டிருக்க, அவளுடைய சிறு பழுப்பு நிறக் கண்கள் கீழ்நோக்கியவாறிருந்தன. நான் *இந்தவிதமாக* சைகை செய்து இன்னொரு முழங்காலை வெளியே நீட்டினேன், அவள் வந்து அமர்ந்துகொண்டாள்.

42 பெக்கிக்கு நீண்ட கால்கள் இருந்தன, ஆகவே அவை தரையைத் தொடுகின்ற அளவுக்கு இருந்தன. குட்டி சாராளோ, குறுநடையிட்டு வந்தாள், ஆகவே நான் சாராளின் மீது என் இரண்டு கரங்களையும் வைத்து இழுத்து அணைத்தேன். குட்டி சாராள் பெக்கியை நோக்கிப் பார்த்து, “பெக்கி, நீ வேண்டுமானால் முழு அப்பாவையும் வைத்துக்கொண்டிருக்கலாம், ஆனால் அப்பா என்னை முழுவதையும் வைத்துக் கொண்டிருக்கிறாரே!” என்று கூறினாள்.

43 அதே விதமாகத்தான் இது இங்கேயும் உள்ளது என்று நான் நினைக்கிறேன். நமக்கு எல்லா வேதக்கல்லூரி அறிவும், எல்லா மகத்தான கிரேக்க வார்த்தைகளும் நமக்கு தெரியாமல் இருக்கலாம், இந்த மக்கள் கூட்டத்திற்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் ஒரு காரியம் நிச்சயம், *நம்முடைய* எல்லாவற்றையுமே இயேசுவானவர் கொண்டிருக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன். ஆமென்.

சரி, சகோதரன் நெவில்.

***உதவிக்காரர்களின் நியமனம்*** TAM58-0720E

(The Placing of Deacons)

**சபையின் ஒழுக்கம், கட்டளை மற்றும் கோட்பாடு என்ற தொடர் பிரசங்கங்கள்**

இந்தச் செய்தியானது சகோதரன் வில்லியம் மரியன் பிரான்ஹாம் அவர்களால் 1958-ம் வருடம், ஜூலை மாதம், 20-ம் தேதி, ஞாயிற்றுக்கிழமை மாலையில், அமெரிக்கா, இந்தியானா, ஜெபர்சன்வில்லில் உள்ள பிரான்ஹாம் கூடாரத்தில் அளிக்கப்பட்டது. பின்னர் காந்த ஒலிநாடா ஒலிப்பதிவிலிருந்து எடுக்கப்பட்டு, ஆங்கிலத்தில் முழுமையான செய்தியாக அச்சிடப்பட்டது. இந்த தமிழ் மொழிபெயர்ப்பு Voice of God Recordings மூலமாக அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது.

TAMIL

©2023 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

## பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:



VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org